**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**
**OS.No.78/2020**

| DEPOSITION OF WITNESS | PW.3 |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| NAME | VELU | TALUK | |
| FATHER NAME | VARADHARAJ | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

**Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 18.08.2023**

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அழைக்க அழைப்பாணை வந்தது. நான் மாயவேலின் அக்காவின் கணவர் ஆவேன். என்னுடைய சொந்த ஊர் அணைக்கட்டு தாலுக்கா குப்பம்பட்டு கிராமத்தில் எனது நிரந்தர விலாசம் ஆகும். 1988 ம் ஆண்டு திருமணமானபிறகு எம்.வி.குப்பம் கிராமத்திற்கு வந்து விட்டேன். நான் எம்.வி. குப்பத்திற்கு வந்ததற்கான ஆதாரமாக ஆதார் அட்டை அல்லது வாக்காளர் அட்டை தாக்கல் செய்தாதான் தெரியவரும் என்றால் சரிதான். நான் எம்.வி.குப்பத்தில் வசிக்கவில்லை என்றாலும் எனது மைத்துனருக்கு ஆதாரமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அட்டை எம்.வி.குப்பத்தின் விலாசத்தில் உள்ளது அதனை தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

2. 23.11.2001 அன்று மாயவேலு மேஸ்திரி வேல்முருகனுக்கிடையே ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒப்பந்த பத்திரம் யார் பெயரில் என்று எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினார்கள் என்றால் 10 ரூபாய்க்கு பத்திரம் வாங்கினார்கள் யார் பெயரில் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. எங்கு வாங்கினார்கள் என்று தெரியாது. எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் தாலுக்கா அலுவலகத்தில் எழுதினார்கள். யார் எழுதினார்கள் என்றால் தட்டச்சு செய்யப்பட்டு எடுத்து வந்தார்கள் அதனை படித்துப்பார்த்து நான் கையெழுத்து செய்தேன். யார் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஒப்பந்தம் போடப்பட்ட கிழமையும், நேரமும் எனக்கு தெரியாது என்றால் கிழமை தெரியாது நேரம் காலை சுமார் 11.00 மணி இருக்கும்.

3. மேஸ்திரி வேல்முருகன் மாயவேல் குடும்பத்திற்கு உறவினர் என்றால் சரிதான். அவர் காண்ட்ராக்ட் தொழில் செய்துவருகிறாரா என்று அன்றைய தேதியில் எனக்கு தெரியாது என்றால் அவர் காண்ட்ராக்ட் தொழில் செய்துவருகிறாரா என்று எனக்கு தெரியாது ஆனால் அவர் மேஸ்திரி வேலை செய்து வருகிறார்.

4. மாயவேல் கோவிலின் எந்த பொறுப்பில் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் மாயவேலின் தந்தை கோவிலின் தர்மகர்த்தாவாக இருந்ததால் அதன்

அடிப்படையில் ஒப்பந்தம் செய்தார். ஒப்பந்தம் செய்த தேதியன்று கோவிலுக்கு எந்த பொறுப்பின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒப்பந்தத்தை முழுமையாக படித்துப்பார்த்தேன்.

5. நான் வேல்முருகனுடன்தான் வேலை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த ஒரு கட்டிடம் கட்டுவதாக இருந்தாலும் ஊர்பஞ்சாயத்தின் அனுமதி பெற வேண்டும் என்று சொன்னால் சரிதான் ஆனால் அனுமதி பெற்று கோவில் கட்டினார்களா என்றால் எனக்கு தெரியாது. கோவில் ஊர் சொத்து என்றால் சரியல்ல மாயவேலின் தந்தையுடைய சொத்து. மாயவேலின் தந்தை பெயரில் கோவில் உள்ளதாக ஆவணம் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை.

6. கோவில் அமைந்துள்ள இடத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எவ்வளவு நீள அகலத்தில் மேற்படி கோவில் உள்ளது என்றால் கட்டிடத்தின் அகலம் 28 X 36 அடி ஆகும். ஒப்பந்தத்திற்கு முன்பணமாக ரூபாய் 2,00,000/- கொடுக்கப்பட்டது. கோவிலிற்கு ஆடிட் கணக்கு காட்ட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

7. ஒப்பந்தத்தில் எந்த தேதியில் தளம் போட வேண்டும், எந்த தேதியில் பூசுவேலை செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ஒப்பந்தம் தாலுக்கா அலுவலகத்தில் போடப்பட்டது. எங்கு சென்று தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒப்பந்தம் போடப்பட்ட போது நானும், மாயவேல் மற்றும் வேல்முருகன் ஆகிய மூவர் மட்டும்தான் இருந்தோம் என்றால் சரியல்ல ரேணு என்ற மற்றொரு நபரும் இருந்தார். ரேணு மாயவேலிற்கு மாமா முறையாகும்.

8. நான் சொல்வது போல் ஒப்பந்தம் போடப்படவில்லை என்றாலும் அதில் நானும், ரேணுவும் சாட்சியாக கையொப்பம் இடவில்லை என்றாலும், ஊர்மக்களை ஏமாற்றுவதற்காக வீட்டிலேயே தயார் செய்த ஒப்பந்தம் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கோவிலிற்கு புதிதாக கட்டிடம் எதுவும் கட்டப்படவில்லை என்றாலும் ஆதிகாலத்திலிருந்தே இருந்து வந்த கட்டிடத்தைத்தான் இன்றுவரை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. மாயவேல் உட்பட நானும், ரேணு, வேல்முருகன் ஆகியோர்கள் கோவில் சொத்தை அபகரிக்க ஆசைப்படுகிறோம் என்றாலும் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல. அதனால் எனது சாட்சி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.